Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
**C.C.No. 1/2014**

**Deposition of witness for: PW - 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | பிரித்விராஜன் | **Father/Husband Name** | : | ராஷேஸ்வரன் |
| **Age** | | | **Calling** | : | |
| **Date** | : | **23.07.2025** | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23rd day of July 2025.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது கைலாசபுரத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். பட்டியல சாட்சிகள் சுந்தரபாண்டி, முருகன், பழனிகுமார், செல்வபிரசாத், பாலமுருகன், சுப்பிரமணியன் ஆகியோர்களை தெரியும், ராஜேந்திரபிரசாத், செல்வபாண்டி, தவமணி, சிலம்பரசன், பழனிச்சாமி, ராஜ்குமார், பிரசாத், மணிகன்டன், காத்தமலைச்சாமி, ஆறுமுகம், தமிழ் முகுந்தன் ஆகியோர்களை எனக்கு தெரியும். 09.02.2005 ம் தேதி மேலூர் அரசு கலை கல்லூரியில் விளையாட்டு விழா தொடங்கி 11.02.2005 ம் தேதி விளையாட்டு விழா முடிவடைந்தது. இந்நிலையில் அச்சமயத்தில் இருதரப்பினருக்கும் சண்டை நடந்தது என்று சொன்னார்கள். நான் அச்சமயத்தில் விளையாட்டு விழா முடிந்தவுடன் கல்லூரியிலிருந்து வெளியேற்றிவிட்டேன். மறுநாள் காலையில் சுமார் 09, 10 மணிக்கு கல்லூரிக்கு சென்றேன், நான் அப்போது BA, History 2 ம் ஆண்டு படித்துக்கொண்டிருந்தேன். அன்றையதினம்

கல்லூரி விடுமுறை என தகவல் பலகையில் ஒட்டியிருந்தது. அதை பார்த்து நான் தெரிந்துகொண்டேன். சுமார் 10.30 மணி இருக்கும்போது கல்லூரி விளையாட்டு மைதானம் வழியாக நான் உட்பட சுமார் 5 பேர் வெளியே செல்வதற்காக சென்று கொண்டிருந்தோம், அப்போது எதித்தாற்போல் சுமார் 10 நபர்கள் கையில் கத்தி, கம்பு, அருவாளுடன் வந்து சாட்சி சுந்தரபாண்டியனை தாக்கினார்கள், அதைபார்த்த நாங்கள் அங்கிருந்தவர்களும் விலக்கிவிட்டோம். அப்போது அந்த 10 நபர்கள் என்னையும், என் உடன் இருந்தவர்களையும் தாக்கினார்கள், அந்த 10 நபர்கள் பெயர் எனக்கு தெரியும் ராஜேந்திரபிரசாத், செல்லபாண்டி, பழனிச்சாமி, பிரசாத், சிலம்பரசன், தவமணி, மணிகன்டன், காத்தமலைச்சாமி, ஆறுமுகம், தமிழ்முகுந்தன். 10 பேர்களும் சேர்ந்த தாக்கியதில் வலி பொறுக்கமுடியாமல் அங்கிருந்து நானும் அங்கிருந்தவர்களும் ஓடிவிட்டோம். சிறிது நேரம் கழித்து எனக்கும், என்னுடன் இருந்தவர்களுக்கும் மயக்கம் ஏற்பட்டது, நாங்கள் மயக்கம் தெளிந்து பார்த்தபோது நாங்கள் மேலூர் அரசு மருத்துவமனையில் இருந்தோம், என்னை எதிரி பிரசாத், மற்றும் தவமணி எனது வலது கையில் வெட்டிவிட்டனர். எனது இடது கையிலும் மேற்படி இரண்டு நபர்கள் வெட்டி காயம் ஏற்படுத்தினார். நான் ஒரு வாரம் மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். தற்போது சாட்சி தனது இரு கையிலும் ஏற்பட்ட வெட்டுப்பட்ட காயத்தழும்பை காட்டினார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி ஆஜர் இல்லை, குவிமுச பிரிவு 317ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

நான் கல்லூரியில் படித்தற்கான ஆவணங்கள் அடையாள அட்டை

எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. இந்த வழக்கு பதிவு செய்தவற்கு முன்பே என் மீது குற்ற எண் 245/2005 தாழ்த்தப்பட்டவர்கள் வன்கொடுமை சட்டத்தின்கீழ் என்மீதும் மற்ற பட்டியல் சாட்சிகள் மீதும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கல்லூரிக்கு எத்தனை மணிக்கு சென்று, எத்தனை மணிக்கு திரும்புவேன் என்றால் காலை 09.30 மணிக்கு சென்று, மாலை 04.30 மணிக்கு திரும்புவேன். நான் கரிகாலன், சுந்தரபாண்டி, முருகன், தினேஷ் ஆகியோர்கள் ஒரே சமூகத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். அதேபோல் இந்த வழக்கின் எதிரிகள் தாழ்த்தப்பட்ட சமூகத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். உங்கள் கல்லூரிக்கு வந்து செல்லும் பாதையானது திருச்சி – மதுரை மெயின்ரோட்டில் தெற்குபுறமாக உள்ளது என்றால் சரியல்ல, கிழக்குபுறமும், மேற்குபுறமும் இரு பாதைகள் இருந்தது.

2) கல்லூரிக்கு நான் வந்தபொழுது கல்லூரி கால வரையற்ற விடுமுறை என்பது தெரியும் என்றால் சரிதான். சம்பவம் அன்று 02.12.2005 ம் தேதி எனது சார்ந்தவர்களையும் கைது செய்ய சொல்லி எதிரி தரப்பினர்கள் கல்லூரியில் உள்ளிருப்பு போராட்டம் நடத்தினார்கள் என்றால் எனக்கு தெரியாது. உங்கள் கல்லூரியின் விளையாட்டு மைதானம் சுமார் 50, 60 ஏக்கர் என்றால் சரிதான். யார், யார், எந்த, எந்த ஆயுதங்களை கொண்டு வந்தார்கள் என்று உங்களால் சொல்லமுடியாது என்றால் ஞாபகம் இல்லை. எதிரிகள் தாக்கியதில் மயங்கிவிட்டேன் என்றும், விழித்து பார்த்தபோது அரசு மருத்துவமனையில் இருந்தேன் என்று முதல் விசாரணையில் கூறியுள்ளதால் யார் என்னை அரசு மருத்துவமனையில் சேர்த்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான், நண்பர்கள் சேர்த்தார்கள் என்று சொன்னார்கள். நான் எப்போது மயங்கினேன், எப்போது கண் முழித்தேன் என்றால் காலை 11.00 மணிக்கு மயங்கினேன்,

மதியம் 01.00 அல்லது 02.00 மணிக்கு முழித்துக்கொண்டேன்.

3) இந்த வழக்கு சம்மந்தமாக நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் கரிகாலன் புகார் கொடுத்தார், என்னிடம் போலீசார் வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்கள். கரிகாலன் புகார் எழுதி கொடுத்தாரா, அல்லது புகர் வாக்குமூலம் கொடுத்தாரா என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னை மேலூர் போலீசார் எவ்வளவு நேரம் விசாரித்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. நான் சொன்னதுபோல் எதிரிகள் எதுவும் தாக்கவில்லை, எதிரிகள் தரப்பில் சம்பவத்திற்கு உங்கள் மீது வழக்கு பதிவு செய்ததால், எங்களை கைது செய்ய சொல்லி கல்லூரியில் 12.02.2005ம் தேதி கல்லூரிக்குள் உள்ளிருப்பு போராட்டம் செய்தார்கள் என்று தெரிந்துகொண்ட நாங்கள் அந்த வழக்கினை சரிகட்ட நாங்களே காயங்களை ஏற்படுத்திக்கொண்ட எதிரிகள் எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய காயத்திற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல, எதிரிகள் என்னை தாக்கவும் இல்லை, கொலை மிரட்டல் விடுக்கவும் இல்லை என்றால் சரியல்ல.

Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
**C.C.No. 1/2014**

**Deposition of witness for: PW - 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | **:** | வினோத்குமார் | **Father/Husband Name** | : | முனிச்சாமி |
| **Age** | | | **Calling** | : | |
| **Date** | **:** | **23.07.2025** | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23rd day of July 2025.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் மேலூர் பெரிய சூரக்குண்டில் குடியிருந்து வருகிறேன். நான் மேலூர் அரசு கல்லூரியில BA பட்டப்படிப்பு படித்துள்ளேன். ராஜேந்திரபிரசாத், செல்வபாண்டி, தவமணி, சிலம்பரசன், பழனிச்சாமி, ராஜ்குமார், பிரசாத், மணிகன்டன், காத்தமலைச்சாமி, ஆறுமுகம், தமிழ் முகுந்தன் ஆகிய வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். வழக்கின் பட்டியல் சாட்சிகளை எனக்கு தெரியும், 12.02.2005 ம் தேதி நான் வழக்கம் போல் காலை 10.00 மணிக்கு கல்லூரிக்கு சென்றிருந்தேன், அன்று கல்லூரி முதல் நாள் நடைபெற்ற சண்டையால் கல்லூரியின் கால வரையற்ற விடுமுறை என சுற்றறிக்கையை பார்த்து தெரிந்துகொண்டேன். நான் எனது நண்பர்களுடன் கல்லூரியில் பேசிக்கொண்டிருந்தபோது கல்லூரியின் பின்புறம் சத்தம்கேட்டு போய் பார்த்தபோது வழக்கின் சாட்சிகளான சுந்தராபாண்டியன், கரிகாலன், திணேஷ்குமார், முருகன்,

பிரித்விராஜன் ஆகியோர்கள் பலத்த காயத்துடன் சத்தம்போட்டு அலறிக்கொண்டிருந்தார்கள், அவர்களை ஆம்புலன்ஸ்ல் ஏற்றி மேலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைக்கு உதவியாக இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி ஆஜர் இல்லை, குவிமுச பிரிவு 317ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரித்தார்களா இல்லையா என்றால் விசாரித்தார்கள். போலீசார் விசாரணையிலும் முதல் விசாரணையில் சொன்னதைதான் சொன்னேன் என்றால் சரிதான். முதல் விசாரணையிலும், போலீசார் விசாரணையிலும் சொன்ன விவரங்களை தவிர வேறு எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 11.02.2005ம் தேதியன்று மேலூர் காவல் துறையால் பதிவு செய்யப்பட்ட குற்ற 245/2005 ன் நானும் ஒரு குற்றவாளி என்றால் சரிதான். என் மீது தாக்கல் செய்த வழக்கில் இந்த வழக்கின் எதிரிகளுடன் சமரசமாக சென்றதனால் வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டோம் என்றால் சரிதான்.